**யோனிக்குழாய்த் தொற்று:**

- இவ்வகையான தொற்றுக்கள் பாலியல் செயல்களால் ஏற்படுவதில்லை. ஆனால் இத்தொற்று ஏற்படுவதால் யோனியில் இருந்து வெளிவரும் திரவங்களில் மாற்றங்கள் ஏற்படுகின்றன.
- இது பிறப்புறுப்பில் வழவழப்பான துற்நாற்றமுடைய நீர் வடிதலை ஏற்படுத்துகிறது.இதற்கு சரியான சிகிச்சை எடுத்துக்கொள்ளாவிட்டால் கர்ப்பம் தரித்தலில் பிரச்சனையை ஏற்படுத்துகிறது. வாய்வழி எதிர் உயிரிகளை எடுத்துக்கொள்வதன் மூலம் இதற்கு தீர்வு காண முடியும்.
- பூஞ்சைத்தொற்றால் யோனிக்குழாயில் அரிப்பு, சிவத்தல், வீக்கம் மற்றும் அடர் மஞ்சள்-வெள்ளை நிற திரவம் வெளியேறுதல் போன்ற பிரச்சனைகள் ஏற்படுகின்றன. பூஞ்சை எதிர் உயிரிகளை எடுத்துக்கொள்வதன் மூலம் இதற்கு தீர்வு காண முடியும்.

## பால்வினை நோய் உள்ள ஒருவர் என்ன செய்ய வேண்டும்

மேற்கூறிய அறிகுறிகள் தென்பட்டால் DSC கிளினிக்கை அணுகி சிகிச்சை பெற்றுக்கொள்ளவும்.


பால்வினை நோய் இருப்பதாக தெரியவந்தால் சிகிச்சை காலம் முடியும் வரை உடலுறவு கொள்வதை தவிர்க்க வேண்டும். சில பால்வினை நோய்கள் உங்களுக்கு இருப்பது தெரிந்தால் (எ.கா: கிளமிடியா, கொணோரியா, மேகநோய்) உங்களுடன் உடலுறவு கொள்ளும் நபரும் சிகிச்சை எடுத்துக்கொள்வது அவசியம்.

DSC கிளினிக்கில் பெண்கள் சிகிச்சை பெற சிறப்பு அமைப்பு உள்ளது. ஒவ்வொரு புதன் கிழமை காலை 8 மணிமுதல் 11 மணி வரையும் மற்றும் புதன், வியாழன், வெள்ளிக்கிழமைகளில் மதியம் 1 மணி முதல் மாலை 4 மணி வரையிலும் சிகிச்சை அளிக்கப்படுகிறது. நோய் பாதிப்பு ஆய்வு, சிகிச்சை முறைகள், அடிப்படை கருத்தடை முறைகள் மற்றும் அறிவுரைகள் போன்றவை நம்பகமான முறையில் அளிக்கப்படுகிறது.

## பொறுப்புத்துறப்பு:

நாங்கள் இந்த நோயாளி தகவல் சிற்றேற்றில் தற்போதைய மருத்துவ சான்றுகள் மற்றும் கருத்துகள் அடிப்படையில், முழு மற்றும் சரியான விபரங்களை வழங்க முயற்சி செய்துள்ளோம். எனினும், தகவல் மற்றும் ஆலோசனைகள் பல்வேறு ஆதாரங்களில் இருந்தும், காலப்போக்கிலும் மாறுபடலாம். உங்களுக்கு மேலும் கேள்விகள் இருந்தால், உங்கள் மருத்துவர் அல்லது சுகாதாரச்சேவை வழங்குநரை அணுகவும்.

## எங்கள் இடங்குறிப்பு




**DSC கிளினிக்**
31 Kelantan Lane #01-16 S(200031)

## பஸ் சேவைகள்

23, 64, 65, 66, 67, 130, 139, 147, 857
Bugis (EWL/DTL)
Rochor (DTL)
Lavender (EWL/DTL)
Farrer Parkr (DTL)

## எங்களுடன் சந்திப்பு முண்பதிவு செய்ய

சந்திப்பு முண்பதிவு மையத்தை அழைக்கவும்
6293 9648

அல்லது மின்னஞ்சல் மூலம்
தொடர்புகொள்ள வேண்டிய முகவரி
apptdsc@nsc.com.sg

மேலும் மருத்துவகம் தகவல் கிடைக்க எங்கள் இணையதளம் WWW.DSC-CLINIC.SG
அல்லது எங்கள் FACEBOOK - WWW.FACEBOOK.COM/DSCSG

W-T-1
Printed - August 2016

# பால்வினை நோய் (WOMEN AND STI)

NATIONAL
SKIN
CENTRE

DSC Clinic

## பால்வினை நோய் என்பது என்ன?

பால்வினை நோய் என்பது ஒருவரிடம் இருந்து மற்றவருக்கு பாலினச் சேர்க்கை அல்லது உடல் சுரப்பிகள் மூலம் பரவும் நோய் ஆகும்.

## பால்வினை நோயின் அறிகுறிகள்

நிறைய பெண்களுக்கு பால்வினை நோய் இருக்கும் அறிகுறிகள் தென்படுவதில்லை. இதனை பரிசோதித்து அதற்கு சரியான மருத்துவ உதவி பெருவது மிக அவசியம்.

- அடர்த்தியான, மஞ்சள்/பச்சை நிறத்தில் இரத்தம் வெளியேறுதல்.
- கருப்பை வாய்க்குழாயில் அரிப்பு, வீக்கம் அல்லது சிவந்திருத்தல்.
- உடலுறவின் போது வலி ஏற்படுவது.
- சிறுநீர் கழிக்கும் போது வலி ஏற்படுவது.
- புண், அசாதாரணமான சதை வளர்ச்சி போன்றவை பிறப்புறுப்பில் ஏற்படுவது.
- அடிவயிற்று வலி.
- அசாதாரணமான இரத்தப்போக்கு (எ.கா: உடலுறவின் போது ஏற்படுவது)

மேற்கூறிய அறிகுறிகள் இருந்தாலும், இல்லவிட்டாலும் உங்கள் மருத்துவரை அணுகி ஆலோசனை பெறவும்.

## பெண்களுக்கு ஏற்படும் பொதுவான பால்வினை நோய்கள்

**கிளமிடியா மற்றும் கொனோரியா :**

- இரண்டு வகை நோய்களுமே பாக்டீரியா தாக்குதலினால் ஏற்படுகிறது. இது அடர்த்தியான மஞ்சள் நிற யோனி திரவம் வெளியேறுதல் மற்றும் அதிகமான உதிரப்போக்கை ஏற்படுத்துகிறது.
- இருப்பினும் வெளியில் தெரியும்படியான அறிகுறிகள் தென்படுவதில்லை.
- இதற்கு முறையாக சிகிச்சை எடுத்துக்கொள்ளாவிட்டால் இடுப்புவலி மற்றும் மலட்டுத்தன்மையை ஏற்படுத்தும். மேலும் இது இரத்தத்தில் கலந்து (கொனோரியாவுடன்) தீர்க்கமுடியாத வியாதிகளை ஏற்படுத்துகிறது.
- இதற்கு ஆரம்ப நிலையில் நுண்ணுயிர்க்கொல்லிகள் மூலம் தீர்வு காண முடியும்.

**டிரைகோமோனாசிஸ்:**

- இது புரோடோசோவா எனப்படும் ஓரணு ஒட்டுண்ணி மூலம் ஏற்படும் கருச்சிதைவு நோய் ஆகும்.
- பிறப்புறுப்பில் அறிப்பு ஏற்படுவது இதன் அறிகுறிகளில் ஒன்றாகும். இதற்கு சிகிச்சை எடுக்காவிட்டால் கருப்பைவாயில்
- எரிச்சல் மற்றும் குழந்தைப்பேறில் சிக்கல் போன்றவற்றை ஏற்படுத்திவிடுகிறது.
- நுண்ணுயிர்க்கொல்லிகள் மூலம் இதனை சரிசெய்ய முடியும்.

**பிறப்பிறுப்பில் அக்கி:**

- இது வைரஸ் மூலம் ஏற்படும் நோய் ஆகும்.
- பிறப்புறுப்பில் கொப்புளம் மற்றும் புண் ஏற்படும். முதல் வகை வைரஸ் வாய்ப்புண்ணை ஏற்படுத்துகிறது.
- இது 1-3 வாரங்கள் நீடிக்கிறது.
- தொடர்ச்சியாக மருந்துகள் எடுத்துகொள்வதன் மூலம் திரும்பவும் ஏற்படாமல் தடுக்கமுடியும்.

**இனஉறுப்பு மரு:**

- இது வைரஸ் மூலம் ஏற்படும் இனஉறுப்பு மரு ஆகும். இது ஹியூமன் பைபிலோமா வைரஸ்(HPV) ஆல் ஏற்படுகிறது.
- எவ்வித அறிகுறிகளும் தென்படுவதில்லை.சிலருக்கு சதைப்பகுதியில் வளர்ச்சி ஏற்படுகிறது.இது சிலருக்கு அளவில் பெரிதாகலாம் அல்லது எண்ணிக்கையில் பெருகலாம்.
- கிரீம்கள் மற்றும் நைட்ரஜன் மருந்துகளை எடுத்துக்கொள்வதன் மூலம் சரி செய்ய முடிகிறது.
- இது சில நேரங்களில் கருப்பைவாய் அல்லது பிறப்புறுப்பில் கட்டிகளை ஏற்படுத்தும். இது கேன்சராக மாற வாய்ப்புள்ளது.
- HPV தொற்று ஏற்படாமல் இருக்க தடுப்பூசிகள் உள்ளன.
- பாப்ஸ்மியர் சிகிச்சையை 25 வயதிற்கு மேற்பட்ட பெண்கள் மூன்று வருடத்திற்கு ஒரு முறை செய்துகொள்வதன் மூலம் இதனை தடுக்க முடியும்.

**மேகநோய்: (ஸிபிலிஸ்)**

- டிரைபோனிமா பல்லிடம் எனும் பாக்டீரியாத் தொற்றினால் இந்நோய் ஏற்படுகிறது.
- இது வெவ்வேறு நிலைகளில் வெவ்வேறு அறிகுறிகளை ஏற்படுத்துகிறது.

| ஆரம்ப நிலை | இரண்டாம் நிலை | மூன்றாம் நிலை |
|---|---|---|
| பிறப்புறுப்பில் வலியில்லாத புண்கள் ஏற்படுதல் | உள்ளங்கை மற்றும் உடம்பில் தடிப்புகள் ஏற்படுதல் மற்றும் வாய்ப்புண்;முடி உதிர்வு | இதயம் மற்றும் மூளையில் பிரச்சனைகள் ஏற்படுதல் |

- இரத்தப்பரிசோதனை மூலம் இதனைக் கண்டறிய முடியும்.
- பெனிசிலின் ஊசிகள் மற்றும் நுண்ணுயிர்க்கொல்லிகள் மூலம் தீர்வு காண முடியும்.

**ஹெபடைடீஸ் பி:**

- கல்லீரலில் ஏற்படும் வைரஸ் தொற்று ஆகும். இது நோய்த் தொற்றுள்ள இரத்தம் மற்றும் உடல் திரவங்கள் மூலம் ஒருவரிடம் இருந்து மற்றவருக்கு பரவுகிறது.
- ப்ளூ காய்ச்சல் மற்றும் மஞ்சள் காமாலை நோயை ஏற்படுத்துகிறது. சிலர் இந்நோயில் இருந்து முற்றிலும் குணமடைந்து விடுகிறார்கள். சிலர் இதனால் நீண்டநாள் பாதிப்புக்கு உள்ளாகி தங்களுடன் பாலியல் செயலில் ஈடுபடுபவர்களையும் பாதிப்புக்கு உள்ளாக்குகிறார்கள். குறைந்த சதவீத மக்கள் மட்டுமே தீவிர கல்லீரல் பாதிப்பு அடைகிறார்கள்.
- தடுப்பூசிகள் எடுத்துக்கொள்வதன் மூலம் இதனை குணப்படுத்தலாம்.

**எச்.ஐ.வி.:**

- எச்.ஐ.வி எனப்படுவது எய்ட்சு நோயை உண்டாக்கும் வைரஸ் வகை ஆகும். இந்த வைரஸ் குருதி, விந்து நீர், யோனித்திரவம், தாய்ப்பால் போன்ற உடல் திரவங்கள் மூலமாக ஒருவரிடம் இருந்து மற்றவருக்குப் பரவுகிறது.
- ஆரம்பத்தில் இந்நோய் எவ்வித அறிகுறிகளும் இல்லாமல் இருக்கும்.
- நோய்த்தொற்று ஏற்பட்டவருக்கு காய்ச்சல், வீங்கிய சுரப்பிகள், நடுக்கம், தள்ர்ச்சி, அதிக வியர்வை (குறிப்பாக இரவு நேரங்களில்) எடை குறைவு, வயிற்றுப்போக்கு போன்றவை காணப்படும்.
- தீவிர நோய்த்தொற்று ஏற்பட்டு இறுதியில் எய்ட்சு நோய் ஏற்படுகிறது.

எச்.ஐ.வி. எதிர் உயிரிகளை எடுத்துக்கொள்வதன் மூலம் இதனை கட்டுப்பாட்டுக்குள் வைக்க முடியும். ஆரம்ப நிலையில் மருந்துகள் எடுத்துக்கொள்வதன் மூலம் நோயை கட்டுப்படுத்தவும் வாழ்நாளை நீட்டிக்கவும் முடிகிறது.